08.07.2026

PW.1 கொண்டம்மாள்

MCOP. No. 129/2025

ம.சா.1 கடந்த 19.02.2026ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு, 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில்,

**2ம் எதிர் மனுதாரர் தரப்பில் இன்று குறுக்கு விசாரணை :**

1. நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் வீட்டில் தையல் செய்து வருகிறேன். எனக்கு டெய்லரிங் தெரியும் என்று காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். விபத்து நடந்ததாக சொல்லக்கூடிய தினம் டாட்டா ஏஸ் வாகனத்தில் எத்தனை பேர் சென்றீர்கள் என்றால் டிரைவர் மற்றும் நான் இரண்டு நபர்கள் தான் சென்றோம். சுமதி, சுதா ஆகியோர்கள் எங்களுடன் வரவில்லை என்றால் வரவில்லை. முதல் தகவல் அறிக்கையில் மேற்படி சுமதி சுதா எங்களுடன் வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் முதல் தகவல் அறிக்கை அவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளது ஆனால் அவர்கள் வரவில்லை.

2. நான் ஒன்றாம் எதிர்மனுதாரர் பழனி குமாரிடம் வேலை செய்யவில்லை என்றால் ஆமாம். நான் ஓட்டுனருக்கு இடது பக்கத்தில் உள்ள சீட்டில் தான் அமர்ந்திருந்தேன். நான் தான் கதவை அடைத்து சீட்டில் உட்கார்ந்து இருந்தேன் என்றால் ஆமாம். மேற்படி கதவை சரியாக பூட்டாததால் தான் வளைவில் திரும்பும் பொழுது கதவு திறந்து நான் கீழே விழுந்தேன் என்றால் இல்லை. விபத்தானது ஒன்றாம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிய நபர் வேகமாக ஓட்டி டோர் திறந்து விட்டது ஆகையால் நான் கீழே விழுந்து விட்டேன்.

3. நான் கதவை சரியாக கூட்டாமல் உட்கார்ந்ததால் தான் இந்த விபத்து என்னுடைய கவனகுறைவால் தான் ஏற்பட்டுள்ளது என்பதால் எனக்கு நஷ்ட ஈடு எதுவும் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் கோரி உள்ள இழப்பீடு அதிகமானவை என்றால் சரியல்ல. எனக்கு இந்த விபத்தினால் நிரந்தர ஊனமோ,

வருமான இழப்போ ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அடிப்படை ஆதாரம் இன்றி நான் மிகைப்படுத்தி இழப்பீடு கோரி உள்ளேன் என்றால் சரியில்லை.

திறந்த நீதிமன்றத்தில் மேலே சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டெழுத்தாரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

A MUTHU ESAKKI
Digitally signed by A MUTHU ESAKKI
Date: 2026.07.04 20:26:31 +0530

நான்காம் கூடுதல் சார்பு நீதிபதி,
மதுரை.